செ.வெ.எண். 657 நாள். 12.10.2007

# செய்தி வெளியீடு

## 16.11.2007 – தேசிய பத்திரிகை தினம்

புதுதில்லியில் உள்ள பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா 1966 ஆம் ஆண்டு நவம்பர் 16ம் தேதி தொடங்கப்பட்டது. நவம்பர் 16ஆம் தினத்தை ஒவ்வொரு வருடமும் "**தேசிய பத்திரிகை தினமாக**" அறிவிக்கப்பட்டு அத்தினத்தில் நாடு முழுவதும் கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்தப்படுவதுடன், இது நாற்பது ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒரு தலைப்பில் கருத்தரங்குகள்/கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டங்களில், மேதகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள், மக்களவை–மாநிலங்களவை உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், மற்றும் முதுபெரும் பத்திரிகையாளர்கள் கலந்து கொண்டு உரையாற்றி வருகின்றார்கள்.

இவ்வாண்டும் பிரஸ் கவுன்சில் ஆப் இந்தியா 16.11.2007 அன்று பத்திரிகை தினமாக கடைப்பிடித்து கல்லூரி மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகள் மற்றும் கூட்டங்கள், விழாக்களை நடத்துமாறு அனைத்து மாநிலங்களையும் கேட்டுக் கொண்டுள்ளது. கல்லூரி அளவில் பேச்சுப் போட்டிகளை நடத்திட கீழ்க்கண்ட தலைப்பினையும் வழங்கியுள்ளது.

"ஊடகம் மக்களின் குரலாக – சுதந்திரத்திற்கு முன்பும் பின்பும்" (Media as People's Voice – Pre and Post Independence)

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, 16.11.2007 (வெள்ளிக்கிழமை) அன்று பத்திரிகை தினத்தை தமிழகமெங்கும் விமர்சையுடன், விழாவாக நடத்திட முடிவு செய்து கல்லூரி கல்வி இயக்ககத்தின் மூலம் முதலில் மாவட்ட அளவில், கல்லூரி மாணவ மாணவிகளிடையே தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் பேச்சுப் போட்டிகளை நடத்தியும் தொடர்ந்து மாவட்ட அளவில் முதலிடம் பெற்றவர்களை கொண்டு

மாநில அளவில் பேச்சுப் போட்டிகளையும் நடத்திடவுள்ளது. மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெற்றவர்களுக்கு 16.11.2007 அன்று மாவட்ட அளவில் நடைபெறும் விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பரிசுகள் வழங்கவுள்ளார்கள். மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகளை நடத்துவதற்குரிய பணி மற்றும் 16.11.2007 அன்று விழா/கூட்டங்கள் நடத்துவதற்குரிய பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையுடன் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மண்டல இணை இயக்குநர்களும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னையில், 16.11.2007 அன்று மாலை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் விழாவில் மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

பேச்சுப் போட்டிகளில் பங்கேற்க விரும்பும் கல்லூரி மாணவ, மாணவிகள் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மண்டல இணை இயக்குநர்களையும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களையும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

து.இராசேந்திரன்,
அரசுச் செயலர்.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தித்துறை

<u>வெளியீடு</u> : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9